


ஹலோ மெட்ராஸ்
ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி




மலர் 3 | சென்னை | தினசரி | 6 பக்கம் | செவ்வாய்க்கிழமை, நவம்பர் 28, 2023 | இதழ் 137

# தெருக்கள், சாலைகளில் மழைநீர் தேக்கம் வீடுகளுக்குள் தண்ணீர் சென்னையில் விடிய, விடிய கொட்டி தீர்த்த கன மழை ஆவடியில் 19 செ.மீ. ; 8 விமானங்கள் ரத்து

சென்னை, 30 நவம்பர் 2023: சென்னையில் நேற்று முதல் பெய்து வரும் கனமழை காரணமாக நகரின் பல பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. சாலை, தெருக்கள் எல்லாம் வெள்ளக்காடாக உள்ளது.

ஆங்காங்கே ஆட்டோ, ஸ்கூட்டர்கள் சிக்கி கொண்டன. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு அடைந்தது. சாலைகளில் தேங்கிய மழை நீரை அகற்றும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னையில் களப்பணிகளை பார்வையிட்டு மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் அதனை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ஆகியோர் அறிவுறுத்தி வருகின்றனர்.

அதிகப்பட்சமாக ஆவடியில் 19 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. கனமழை காரணமாக சென்னை விமான நிலையத்தில் 8 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

2015க்கு பிறகு சென்னையில் அதிக கனமழை பெய்துள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக செம்பரம்பாக்கம், புழல் ஏரிகளில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேற்கு மாம்பலம், தி.நகர் பகுதியில் இருவர் உயிரிழந்தனர்.

தென்கிழக்கு வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை வலுவடைந்து வருவதால் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த 4 அல்லது 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என சென்னை வானிலை மையம் அறிவித்தது.

இந்நிலையில் நேற்று இரவு முதல் இன்று காலை வரை விடிய, விடிய சென்னையில் பெய்து வரும் கன மழை காரணமாக மயிலாப்பூர், தியாகராய நகர் உள்ளிட்ட பகுதிகளில் சாலைகளில் தேங்கிய மழை நீரால் வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர்.

ராயப்பேட்டை மெயின் ரோடு மற்றும் கீழ்கட்டளை ரோட்டில் மழை நீர் தேங்கியுள்ளதால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு அடைந்தது. சுமார் ஒரு கிலோ மீட்டருக்கும் அதிகமான தூரத்தில் மழை நீர் தேங்கியுள்ளதால், பொதுமக்கள் நடந்து செல்வதே சிரமமாக இருந்தது.

சென்னையில் பெரும்பாலான இடங்களில் மெட்ரோ ரெயில் பணிகள் நடைபெற்று வருவதால், சாலைகள் குண்டும், குழியுமாக உள்ளது. இதில் மழைநீர் தேங்கியதால், நடந்து செல்பவர்களும், வாகன ஓட்டிகளும் பெரும் சிரமத்திற்கு ஆளானார்கள்.

சாலைகளில் நீர் தேங்கிய மழை நீரால் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. சில சுரங்கப்பாதைகள் மூடப்பட்டது. இரவோடு இரவு சுரங்கப்பாதையில் தேங்கிய நீரை மாநகராட்சி ஊழியர்கள் அகற்றினார்கள்.

கனமழை தொடர்ந்து கொட்டி வந்த நிலையில், பொதுமக்கள் தேவையில்லாமல் வெளியே வர வேண்டாம் என்று மாநகராட்சி தரப்பிலும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.





மேற்கு மாம்பலம், தி. நகரில் பசுல்லா சாலை, வடக்கு உஸ்மான் சாலை ஆகிய இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. மாம்பலம் கால்வாயில் உள்ள பிரச்சினையே மழை நீர் தேங்க காரணம் என்று கமிஷனர் தெரிவித்தார்.

வேளச்சேரி ரெயில்வே சுரங்கப்பாதையில் மழைநீர் தேங்கி உள்ளதால் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. இதனால் தரமணி பெருங்குடியில் இருந்து செல்வோர் பல கி.மீ. தூரம் சுற்றி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் கொட்டி தீர்த்த கனமழையால் குடியிருப்பு பகுதிகள் தீவுகள் போல மாறியுள்ளன.

சென்னையில் மேற்கு மாம்பலம், தி.நகர் உள்ளிட்ட இடங்களில் அடுக்குமாடி குடியிருப்புகளில் கீழ்தளத்தில் உள்ள வீடுகளில் தண்ணீர் புகுந்தது.இதனால் நேற்று இரவு அப்பகுதி மக்கள் தூக்கத்தை தொலைத்து விடிய, விடிய தவித்தனர். வீடுகளுக்குள் நாற்காலிகளை போட்டு அமர்ந்திருந்தனர். இதே போன்று தாம்பரம், முடிச்சூர் உள்ளிட்ட பகுதிகளிலும் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் மக்கள் கடும் அவதிப்பட்டனர்.

ஆவடி மின்வாரிய அலுவலகத்துக்கு பின்புறம் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் அதிக அளவில் தண்ணீர் தேங்கியுள்ளதால் அங்கு வசித்து வரும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அம்பத்தூர் ஆவின் பகுதியில் உள்ள பட்டரவாக்கம் காந்திநகர், ஞானமூர்த்தி நகர், மேனாம்பேடு மின் வாரிய காலனி உள்ளிட்ட பகுதிகளிலும் மழைநீர் அதிக அளவில் வெள்ளம் போல தேங்கியது. இதனால் அந்த வழியாக ரெயில் நிலையத்துக்கு சென்றவர்கள் கடும் பாதிப்பை சந்தித்தனர். மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புழல் சுற்றுவட்டார பகுதிகளிலும் பலத்த மழை கொட்டி தீர்த்தது.இதனால் புழல் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பகுதிகளிலும் குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்து தீவுபோல் காட்சி அளிக்கிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதியில் 1000-க்கும் மேற்பட்ட வீடுகளை வெள்ளம் சூழ்ந்து உள்ளது. மழைக்காலங்களில் நீடிக்கும் இதுபோன்ற வெள்ள பாதிப்பு களை அதிகாரிகள் சரி செய்துதர வேண்டும் என்பதே அனைத்து பகுதிகளிலும் வசிக்கும் மக்களின் கோரிக்கையாக உள்ளது.

கடும் மழை காரணமாக சாலை, தெருக்களில் எல்லாம் வெள்ளக் காடாக இருந்தது. தி.நகர் பஸ் நிலையத்தில் முழங்கால் அளவுக்கு தண்ணீர்தேங்கி இருந்தது. இதனால் பயணிகள் மிகவும் சிரமப்பட்டார்கள்.

சாலைகளில் எங்கும் மழைநீர் தேங்கி இருந்ததால் வாகனங்கள் செல்லமுடியாமல் மெல்ல ஊர்ந்து சென்றன. பல இடங்களில் ஆட்டோக்கள், ஸ்கூட்டர் தண்ணீரில் நின்று விட்டதால் மிகவும் அவதிப்பட்டனர். பல்வேறு இடங்களில் வீடுகள், கடைகளுக்குள் எல்லாம் தண்ணீர் புகுந்து விட்டது.

கே.கே.நகர் அரசு மருத்துவமனைக்குள் மழைநீர் புகுந்தது. இதனால் அங்கிருந்த நோயாளிகள் கடும் அவதிப்பட்டனர். மருத்துவமனை ஊழியர்கள் தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டனர்.

நேற்று அண்ணாசாலை, ஜி.என்.செட்டி சாலை, உஸ்மான் சாலை என அனைத்து சாலைகளில் தேங்கி இருந்தது. வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்பட்டனர்.

சென்னை பாரிமுனையில் இருந்து அசோக் நகருக்கு அரை மணி நேரத்தில் வழக்கம் போல வரமுடியும். ஆனால் நேற்று பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல நின்றதால் வாகனங்கள் ஊர்ந்து சென்றது. எனவே பாரிமுனையில் இருந்து அசோக்நகர் வர 3 மணி நேரம் ஆனது.

நகரின் அனைத்து பகுதிகளில் இதே போன்ற நிலை இருந்தது.

நேற்றிரவு குறிப்பாகச் சென்னை புறநகர்ப் பகுதிகளான ஆலந்தூர், ஆதம்பாக்கம், மீனம்பாக்கம், பரங்கிமலை பகுதிகளில் மழை அதிகமாக இருந்தது. குறிப்பாக மீனம்பாக்கத்தில் மழை அதிகமாகவே இருந்தது. கனமழை காரணமாகச் சென்னை விமான நிலையத்தில் பயணிகளும், அவர்களை வழியனுப்ப வந்தவர்களும் சிரமத்தை எதிர்கொண்டனர்.

தொடர்ச்சியாகக் கனமழை பெய்த நிலையில், சென்னை விமான நிலையத்தில் இருந்து புறப்பட வேண்டிய 4 விமானங்கள், சென்னைக்கு வர வேண்டிய 4 விமானங்கள் என மொத்தம் 8 விமானங்கள் ரத்து செய்யப்பட்டது.சென்னையில் இருந்து செல்லக்கூடிய அந்தமான், ஹைதராபாத், ஹூப்ளி, டெல்லி, மும்பை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லும் 15 விமானங்கள் கால தாமதமாக புறப்பட்டுச் சென்றன.

அதேபோல சென்னைக்கு வரவேண்டிய திருச்சி, மதுரை உள்பட 10க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாக வந்து சேர்ந்துள்ளது.

சென்னை மாநகர் முழுவதும் நடைபெற்று வரும் மழைநீர் அகற்றும் பணிகள், ஒருங்கிணைத்த கட்டுப்பாட்டு மையம் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

சென்னை மநகராட்சி மக்கள் மழையினால் பாதிக்கப்பட்டிருந்தால், 1913, எண்கள் 04425619204, 04425619206 மற்றும் வாட்ஸ்அப் +91 94454 7720 என்ற எண்ணை தொடர்பு கொண்டு தங்கள் புகார்கள் தெரிவிக்கலாம் என சென்னை மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன மழை காரணமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை மாவட்ட பள்ளிகளுக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

தொடர் கன மழையால் மீட்பு பணிகளை மேற்கொள்வதற்காக அரக்கோணத்தில் இருந்து தலா 25 பேரைக் கொண்ட 5 தேசிய பேரிடர் குழுவினர் இன்று காலை சென்னை வந்தனர். இதில் ஒரு குழுவினர் சென்னை அடையாறு, இந்திரா நகர் பகுதிக்கும்,2 குழுவினர் செங்கல்பட்டு மாவட்டத்திற்கும் 2 குழுவினர் விழுப்புரம் மாவட்டத்திற்கும் புறப்பட்டு சென்றனர்.

தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் 19 செ.மீ. மழையும், சென்னை கொளத்தூர், திரு.வி.க நகர், திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் தலா 15 செ.மீ. மழையும், சென்னை, அம்பத்தூரில் 14 செ.மீ. மழையும் பதிவாகியுள்ளது

இந்த நிலையில் சென்னை யானைக்கவுனி பகுதிகளில் மழை பாதிப்புகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா உள்ளிட்டோர் ஆய்வு செய்தனர். அப்போது அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

"தொடர் மழையால் ஒரு சில தாழ்வான இடங்களில் தேங்கிய மழைநீர் வெளியேற்றப்படுகிறது. சென்னை மாநகராட்சியில் 21 ஆயிரம் ஊழியர்கள் மழைநீரை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.


2 2 சுரங்கப்பாதைகளிலும் மழைநீர் அகற்றப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன. முதலமைச்சரின் உத்தரவின்படி அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரும் களத்தில் செயலாற்றி வருகின்றோம் என்றார்.






# தஞ்சை பெரிய கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு ஆடைக் கட்டுப்பாடு



சென்னை, 30 நவம்பர் 2023: தஞ்சை பெரிய கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு ஆடை கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாக திகழும் தஞ்சை பெரிய கோவில், உலக பாரம்பரிய சின்னமாகவும் விளங்கி வருகிறது. இந்த கோவிலுக்கு தமிழகம் மட்டுமில்லாமல் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள், பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர்.

இந்த கோவிலில் சதய விழா, நவராத்திரி கலை விழா, சித்ரா பவுர்ணமி விழா, ஆஷாட நவராத்திரி விழா, ஐப்பசி மாத அன்னாபிஷேகம் உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் பெரிய கோவிலுக்கு வரும் வெளிநாட்டினர், வெளிமாநில பக்தர்கள் ஆண்களும், ஒரு சில பெண்களும் அரைக்கால் சட்டை அணிந்து வருகின்றனர். இதனால் மற்ற பக்தர்கள் முகம் சுழிக்கும் நிலை உள்ளது.

இதை தடுக்கும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் " டிரஸ்கோடு" என்ற ஆடை கட்டுப்பாட்டு அறிவிப்பு பலகையை கோவில் நுழைவு வாயில், காலணி பாதுகாக்கும் இடம் என 2 இடங்களில் நேற்று முதல் வைக்கப்பட்டுள்ளது. அதில் ஆண்கள் வேட்டி, சட்டை பேண்ட் அணிந்தும், பெண்கள் புடவை, தாவணி, துப்பட்டாவுடன் கூடிய சுடிதார் ஆகியவை அணிந்து வர வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு பலகையை பார்த்த சமூக ஆர்வலர்கள், இது வரவேற்கத்தக்கது என்றும் பக்தர்களும் இதை கடைபிடிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

# பார்முலா 4 கார் பந்தயத்துக்கு தடை கோரி 2வது வழக்கு: விசாரணை ஒத்திவைப்பு





சென்னை, 30 நவம்பர் 2023: சென்னையில் வரும் டிசம்பர் 8, 9 தேதிகளில் நடைபெற உள்ள ஃபார்முலா 4 பந்தயத்துக்கு எதிராக ஐகோர்ட்டில் 2வது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் வரும் டிசம்பர் 9 மற்றும் 10ஆம் தேதிகளில் ஃபார்முலா 4 கார் பந்தயம் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தெற்காசியாவில் முதல்முறையாக இரவு நேர ஸ்ட்ரீட் சர்க்யூட் ஃபார்முலா 4 பந்தயம் சென்னையில் நடைபெறுகிறது. இதற்காக, அரசு சார்பில் 42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஃபார்முலா 4 கார் பந்தயத்திற்கான ஏற்பாடுகள் மற்றும் அதற்கான பாதை அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், சென்னை தீவுத் திடலில் நடத்தப்படும் ஃபார்முலா 4 கார் பந்தயத்துக்கு எதிராக சென்னை ஐகோர்ட்டில் ஏற்கனவே ஒரு வழக்கு தொடரப்பட்ட நிலையில், தற்போது மேலும் ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஃபார்முலா 4 கார் பந்தயம் நடத்த தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது. சென்னையை சேர்ந்த பாலுசாமி என்பவர் ஃபார்முலா 4 கார் பந்தயம் நடத்துவது தொடர்பாக பொதுமக்களிடம் ஒப்புதல் கேட்கவில்லை என்றும், அரசு செலவில் சாகச விளையாட்டுகளை நடத்துவது சட்டவிரோதம் என்றும் அவர் தாக்கல் செய்த மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த மனுவை நாளை விசாரணைக்கு எடுக்க சென்னை ஐகோர்ட் ஒப்புதல் அளித்துள்ளது.

முன்னதாக, இருங்காட்டுக் கோட்டையில் தனி பந்தய தளம் இருக்கும் நிலையில், தீவுத்திடல் மட்டுமல்லாமல் சென்னை நகரில் இந்த கார் பந்தயத்தை நடத்த தடை விதிக்க கோரி சென்னை தண்டையார்பேட்டையை சேர்ந்த மருத்துவர் ஸ்ரீஹரிஷ் ஐகோர்ட்டில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார். இந்த வழக்கு நீதிபதிகள் மகாதேவன், முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில், உயர் நீதிமன்றம், துறைமுகம், பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை, ராணுவ மற்றும் கடற்படை அலுவலகங்கள் செல்கின்ற வழியில், பந்தய வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டி, துறைமுகத்திற்கு செல்லும் கனரக வாகனங்களின் போக்குவரத்தை தடுக்கும் வகையில் பந்தயங்கள் நடத்தப்படுவதாக வாதிடப்பட்டது.

250 கிலோமீட்டர் வேகத்தில் பந்தய கார்கள் செல்லும்போது 130 டெசிபல் ஒலி மாசு ஏற்படும் என்பதால், இது மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களை பாதிக்கும் என குற்றம்சாட்டப்பட்டது. பன்நோக்கு சிறப்பு மருத்துவமனையிலிருந்து 50 மீட்டர் தூரத்தில் பந்தயம் நடக்க இருப்பதாகவும், அப்பகுதியில் ஒலி மாசை ஏற்படுத்தக்கூடாது என்றும், பொதுமக்கள் பாதுகாப்பு பரிசீலிக்கப்படாமல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசு தரப்பில், தெரு பந்தயமாக இரண்டு நாட்கள் மட்டும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை நடத்தப்பட உள்ளதாகவும், அனைத்து பாதுகாப்பு வழிமுறைகளும் பின்பற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டது. இதையடுத்து காவல்துறை, தீயணைப்பு, ராணுவம், கடற்படை ஆகியவற்றின் அனுமதி கடிதங்களை தாக்கல் செய்ய அரசு தரப்பு உத்தரவிட்டு நீதிபதிகள், வழக்கின் விசாரணையை தள்ளிவைத்தனர்.

# சென்னையில் பல்வேறு பகுதிகளில் மழை வெள்ள பாதிப்பு: நடந்து சென்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு

## தேங்கியிருக்கும் மழைநீரை அகற்ற துரித நடவடிக்கை: அலுவலர்களுக்கு உத்தரவு



சென்னை, 30 நவம்பர் 2023: சென்னையில் நேற்று (புதன்) இரவு முழுவதும் பெய்த கனமழையால் தியாகராய நகர், மாம்பலம், அண்ணாநகர், கோடம்பாக்கம், விருகம்பாக்கம், சைதாப்பேட்டை உள்ளிட்ட நகரின் பல்வேறு பகுதிகளில் மழைநீர் தேங்கியுள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அதிகாலை தொடங்கி சென்னையின் பல்வேறு பகுதிகளில் நடந்து சென்று மழை வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்தார் அமைச்சர் மா.சுப்பிரமணியன்.

"முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். மழை பாதிப்பு என்பது ஒரிரு இடங்களில் இருக்கத்தான் செய்யும். சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட எல்லா மக்கள் பிரதிநிதிகளும் விடிய விடிய பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்" என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார். செய்தியாளர்களிடம் மா.சுப்பிரமணியன் பேசுகையில் கூறியதாவது:

"நேற்று காலை முதல் இன்று காலை வரை சென்னையின் பல்வேறு இடங்களில் 10 செ.மீ. முதல் 25 செ.மீ. அளவுக்கு கனத்த மழை பெய்துள்ளது. ஆனால் சென்னையில் பெரும் பகுதியிலான இடங்களில் பாதிப்பு என்பது பெரிய அளவில் இல்லை. சென்னையில் 800 கிலோமீட்டர் தூரத்துக்கான புதிய மழை நீர் வடிகால் கால்வாய்களை அமைத்ததால் மழை பெய்தாலும் முக்கிய சாலைகளில் சில மணிநேரத்தில் வடிந்து விடுகிறது. ஏற்கனவே இருந்த கால்வாய்களை தூர்வாரிய காரணத்தால் தண்ணீர் தேங்கிய சுவடே தெரியாமல் விரைவாக வடிந்து விடுகிறது.

அடையாறு, கேப்டன் காட்டன், பக்கிம்காங் கால்வாய், மாம்பழம் கால்வாய் போன்றவற்றை ஆழப்படுத்தி அகலப்படுத்தி தூர்வாரியதன் விளைவாக இன்று பெரிய அளவில் மழைநீர் சென்று கொண்டிருக்கிறது. மேற்கு மாம்பலத்தில் பெய்த கன மழையால் சாலையில் தேங்கி நிற்கும் மழைநீர் இன்னும் ஒரிரு மணி நேரத்தில் வடிந்து விடும். தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெரிய மழை வந்தாலும் அதை எதிர்கொள்வதற்கு சென்னை மாநகராட்சி தயாராக உள்ளது.

162 இடங்களில் நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு நிவாரண மையமும் பயன்பாட்டில் இல்லை என்கின்ற அளவில் மக்கள் அவரவர்களுடைய வீடுகளிலேயே தங்கி இருக்கிறார்கள். மேற்கு மாம்பலத்தில் பெய்த கன மழையால் சாலையில் தேங்கி நிற்கும் மழைநீர் இன்னும் ஒரிரு மணி நேரத்தில் வடிந்துவிடும். தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரே நாளில் பெய்த 25 சென்டிமீட்டர் மழை என்பது 2015 டிசம்பரில் வந்த மழையின் அளவு. மழை பாதிப்பு என்பது ஒரிரு இடங்களில் இருக்கத்தான் செய்யும்.

முதல்வர் நேற்று மாலையே மக்கள் பிரதிநிதிகளை குறிப்பாக மாநகராட்சி உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் என அனைவரும் களத்தில் இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். எல்லா மக்கள் பிரதிநிதிகளும் விடிய விடிய பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

சைதாப்பேட்டையை பொறுத்தவரை 5 செ.மீ. மழை பெய்தால் கூட திருவள்ளுவர் தெரு, திவான் பாஷ்யம் தோட்டம், சுப்பிரமணிய சாலை போன்ற பகுதிகளில் முழங்கால் அளவுக்கு தண்ணீர் நாள் கணக்கில் தேங்கி நிற்கும். ஆனால் இப்போது அப்படி இல்லை. ஒரு இடத்தில் கூட தண்ணீர் தேங்குவது கிடையாது.

முதல்வர் ஸ்டாலின் முன்கூட்டியே மேலாண்மை செய்த காரணத்தால் மிகப்பெரிய பாதிப்பு இல்லாமல் தவிர்க்கப்பட்டுள்ளது.

சைதாப்பேட்டை பகுதிகளில் மழைநீர் வடிந்து விட்டது. இதனால் பொதுமக்கள் மிகப்பெரிய அளவில் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார்கள். முன்பு எல்லாம் மழை வந்தாலே பயப்படும் நிலை மாறி மழை வந்தால் மகிழ்ச்சி அடையும் நிலை பொதுமக்களுக்கு தற்போது ஏற்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் கடந்த வாரம் வரை கரையோரப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்திருந்தவர்களை அகற்றி அவர்களுக்கு மாற்று இடம் வழங்கியிருந்தார். எனவே செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து 2500 கன அடி நீர் திறந்தாலும் கரையோர மக்களுக்கு பாதிப்பில்லை. மழைநீர் எந்தவித தடங்கலுமின்றி ஆற்றில் சென்று கொண்டிருக்கிறது. தற்போது ஆற்றின் அகலம் அதிகப்படுத்தப்பட்டுள்ளது. எனவே 10,000 முதல் 15,000 கன அடி நீர் திறந்தாலும் பாதிப்பு ஏற்படாத நிலை உள்ளது.

2015 ம் ஆண்டு எவ்வித முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காமல் சுமார் ஒரு லட்சம் கன அடி நீர் திறந்ததால்தான் பாதிப்புகள் அதிகமாக இருந்தது. தற்போது 1000 கன அடி மற்றும் 2000 கன அடி நீர் திறக்கின்றோம் என்று சொல்லிவிட்டுதான் நீர் திறக்கப்படுகிறது. மேலும் கடல் பகுதிகளில் உள்ள முகத்துவாரம் பெரிய அளவில் அகலப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் மழைநீரும் கடலுக்குள் எவ்வித தடையும் இன்றி செல்வதற்கு வாய்ப்புகள் உள்ளது.

சுரங்கப்பாதைகளில் உள்ள மழைநீர்கள் அகற்றப்பட்டு போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சென்னை சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியைப் பொறுத்தவரை சுப்பிரமணிய சாலை, ஜோன்ஸ் சாலையில் உள்ள சுரங்கப்பாதைகளில் 5 செ.மீ மழைநீர் பெய்தாலே போக்குவரத்து பாதிப்பு ஏற்படும். எனவே தற்போது எவ்வித பாதிப்புகளும் இல்லாமல் போக்குவரத்து ஏற்பாடு தடையின்றி சென்றுக் கொண்டிருக்கிறது.

தற்போது 296 மோட்டார் இயந்திரங்கள் சென்னை மாநகராட்சி சார்பாக தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. தற்போது இந்த அளவு மழை பெய்தும் கூட 40 மோட்டார் இயந்திரங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னையில் பெய்த பலத்த மழை காரணமாக சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நெருப்புமேடு, செட்டி தெரு, கோதாமேடு, ஜபார் தெரு, மேற்கு ஜோன்ஸ் சாலை, ஈக்காட்டுத்தாங்கல், கங்கையம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் இன்று (30 ந் தேதி) களப்பணிகளை பார்வையிட்டார்.

# சட்டவிரோத பணப்பரிவர்த்தனை

## அமலாக்கத்துறை அலுவலகத்தில் அமைச்சர் பொன்முடி இன்று ஆஜர்




சென்னை, 30 நவம்பர் 2023: அமலாக்கத்துறை அலுவலகத்தில் அமைச்சர் பொன்முடி நேரில் ஆஜரானார்.

கடந்த 2006 முதல் 2011 வரையிலான காலக்கட்டத்தில் நடந்த திமுக ஆட்சியில், தமிழக அமைச்சரவையில், தற்போதைய உயர் கல்வித் துறை அமைச்சரான க.பொன்முடி கனிம வளங்கள் மற்றும் சுரங்கத்துறை அமைச்சராக இருந்தார். அமைச்சர் பொன்முடி கனிம வளங்கள் மற்றும் சுரங்கத்துறையை கவனித்து வந்ததால், அவருடைய மகன் கவுதம சிகாமணி, மற்றும் அவரது உறவினர்கள் அந்தப் பகுதியில் செம்மண் எடுக்க 2007 பிப்ரவரியில் விண்ணப்பித்திருந்த நிலையில், அதற்கான அனுமதி 2007 மே மாதத்தில், மிக குறுகிய காலக்கட்டத்துக்குள் வழங்கப்பட்டதாக அப்போது குற்றம்சாட்டப்பட்டது.

செம்மண் குவாரியில் மண் அள்ள அனுமதிக்கப்பட்ட அளவை மீறி, 2 லட்சத்து 64 ஆயிரத்து 644 லோடு லாரி செம்மண் எடுத்ததன் மூலம், அரசுக்கு 28 கோடியே 36 லட்சத்து 40 ஆயிரத்து 600 ரூபாய் இழப்பு ஏற்படுத்தியதாக பொன்முடி உள்ளிட்ட 8 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

அமைச்சர் பொன்முடி வீட்டில் அமலாக்கத் துறை சோதனை நடந்தது. சென்னை மற்றும் விழுப்புரத்தில் அமைச்சர் பொன்முடிக்கு தொடர்புடைய இடங்களில் அமலாக்கத் துறையினர் கடந்த ஜூலை 17ம் தேதி சோதனை நடத்தினர். 13 மணி நேர சோதனைக்குப் பிறகு, அமைச்சர் பொன்முடிக்கு சொந்தமான இடங்களில் நடைபெற்ற சோதனையில் ரூ.41.9 கோடி மதிப்புள்ள வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்பட்டதாக அமலாக்கத் துறை தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகின. இதைத்தொடர்ந்து, அமலாக்கத்துறை சோதனைக்குப் பிறகு, சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்துக்கு அன்றைய தினமே, அழைத்துச் செல்லப்பட்ட அமைச்சர் பொன்முடி மற்றும் அமைச்சர் பொன்முடியின் மகனும், எம்.பி.யுமான கவுதம சிகாமணி ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்நிலையில் சட்டவிரோத பணப்பரிவர்த்தனை புகார் தொடர்பாக 30-ந்தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடிக்கு அமலாக்கத்துறை அதிகாரிகள் ஏற்கெனவே சம்மன் அனுப்பி இருந்தனர்.

இந்த நிலையில் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் விசாரணைக்காக இன்று அமைச்சர் பொன்முடி நேரில் ஆஜரானார். இதைத் தொடர்ந்து அமைச்சர் பொன்முடியிடம் அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இந்த விசாரணை நீடித்தது. சட்ட விரோத பண பரிவர்த்தனை புகாரில் அமைச்சர் பொன்முடியிடம் அமலாக்கத்துறையினர் விசாரணை மேற்கொண்டனர்.

# தமிழக அரசின் ஆதரவுடன் இந்தோ சினி அப்ரிசியேஷன் ஃபவுண்டேஷன் பிவிஆர் உடன் இணைந்து வழங்கும் 21வது சென்னை சர்வதேச திரைப்பட விழா



சென்னை, 30 நவம்பர் 2023: திரைப்படவிழா நடைபெறும் தேதிகள்: 14 டிசம்பர் 2023 முதல் 21 டிசம்பர் 2023 வரை

இடங்கள்: பிவிஆர் ஐநாக்ஸ் சினிமாஸ் (முன்னர் சத்யம் சினிமாஸ் - சாந்தம், சீசன், சிக்ஸ் டிகிரி, சேரின் ஸ்க்ரீன்ஸ்) & அண்ணா சினிமாஸ்

தொடக்க விழா: பி வி ஆர் ஐநாக்ஸ் சினிமாஸ் - சத்யம் திரை (டிசம்பர் 14, 2023 மாலை 6:00 மணிக்கு)

நிறைவு விழா: பி வி ஆர் ஐநாக்ஸ் சினிமாஸ் - சத்யம் திரை (டிசம்பர் 21, 2023 மாலை 6:00 மணிக்கு)

தமிழ்த் திரைப்படப் போட்டிப் பிரிவினருக்கு, சமர்ப்பிப்புச் செயல்முறை மற்றும் உள்ளீடுகளைப் பெறுவதற்கான கடைசித் தேதி 7 நவம்பர் 2023 என ப்ரெஸ், எங்கள் இணையதளம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் மிசிகிதி தெரிவிக்கிறது. முன்னோட்டக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட 12 படங்கள் பத்திரிக்கையாளர் சந்திப்பில் அறிவிக்கப்படும். 30 நவம்பர் 2023 அன்று. இந்த ஆண்டும் நாங்கள் 9 விருதுகளை வழங்கவுள்ளோம்.

இந்த ஆண்டு, ஃபிலிம்ஃப்ரீவே மூலம் உள்ளீடுகளை அழைப்பதற்காக முதல் முறையாக உலக சினிமா வகைக்கான போட்டியை அறிமுகப்படுத்துகிறோம். பதில் ஊக்கமளிப்பதாக இருந்தது. இந்தப் பிரிவின் கீழ் 12 திரைப்படங்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம், மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களின் பட்டியல் நவம்பர் 30, 2023 அன்று நடைபெறும் பத்திரிக்கையாளர் சந்திப்பில் அறிவிக்கப்படும். சான்றிதழ்கள் மூலம் 2 விருதுகள் மற்றும் 1 சிறப்புக் குறிப்புகளை வழங்குவோம்.

21வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவின் சிறப்பம்சங்கள்

நாடுகளின் எண்ணிக்கை: 57

திரைப்படங்களின் எண்ணிக்கை: 126

விருந்தினர்கள்: இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு வெளிநாட்டு தூதரகங்களின் தூதர்கள் மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து திரைப்பட இயக்குநர்கள்

தொடக்கத் திரைப்படம்: ஜஸ்டின் ட்ரைட் எழுதிய அனாடமி ஆஃப் எ ஃபால் (கேன்ஸ் திருவிழா 2023, பால்ம் டி'ஓர் வெற்றியாளர்) அல்லது விம் வெண்டர்ஸின் பேர்ப்பக்ட் டேஸ் (கேன்ஸ் விழா 2023, சிறந்த நடிகர் விருது வென்றவர்) இறுதிப் படம்: ஸ்ஒயிட்டிட்ரொமேன் எழுதிய ஸ்வீட் ட்ரீம்ஸ் (ஆஸ்கார் 2024க்கான நெதர்லாந்தின் நுழைவு) அல்லது நன்னி மோரேட்டியின் எ பிரைட்டர் டுமாரோ (கேன்ஸ் திருவிழா 2023, பால்ம் டி'ஓர் பரிந்துரைக்கப்பட்டவர்) மற்ற விருது வென்ற படங்கள்: ஆஸ்கார் பரிந்துரைகள் மற்றும் தேர்வுகள் 1. 2018: யவிரிஒன் இஸ் எ ஹீரோ (இந்தியா) 2. திடீச்சர்ஸ் லவுஞ்ச் (ஜெர்மனி) 3. பேர்ப்பக்ட் டேஸ் (ஜப்பான்) 4. டூ நாட் எஸ்பெக்ட் டூ மச் பிரம் தி யேண்டு ஆப் தி வேர்ல்ட் (ருமேனியா) 5. பாலன் லீப்ஸ் (பின்லாந்து) 6. இன்ஷா அல்லாஹ் எ பாய் (ஜோர்டான்) 7. ஸ்வீட் ட்ரீம்ஸ் (நெதர்லாந்து) 8. மெலடி (தஜிகிஸ்தான்) கேன்னஸ் திரைப்பட விழா வெற்றியாளர்கள் 1. ஜஸ்டின் ட்ரைட் எழுதிய அனாடமி ஆஃப் எ ஃபால் (பாம் டி'ஓர் வெற்றியாளர்) 2. மோலி மானிங் வாக்கர் எழுதிய ஹொவ் டு ஹவ் செஸ் (நிச்சயமற்ற வெற்றி) 3. நன்னி மோரேட்டியின் எ பிரைட்டர் டுமாரோ 4. ஜெசிகா ஹவுஸ்னரின் கிளப் ஜீரோ 5. அகி கவுரிஸ்மாகியின் பாலன் லீப்ஸ் 6. மார்கோ பெல்லோச்சியோவின் கிட்ணப்டு 7. கென் லோசின் தி ஓல்டு ஓக் 8. விம் வெண்டர்ஸ்யின் பேர்ப்பக்ட் டேஸ் பெர்லின் சர்வதேச திரைப்பட விழா - வெற்றியாளர்கள் 1. 20,000 ஸ்பீசிஸ் ஆப் பீஸ் எஸ்டிபாலிஸ் உர்ரெசோலா சோலாகுரென் (சிறந்த முன்னணி செயல்திறன் வெற்றியாளர் மற்றும் கோல்டன் பெர்லின் பியர் வேட்பாளர்) 2. அப்பயர் பை கிறிஸ்டியன் பேட்ஸ்ஓல்டு (சில்வர் பெர்லின் பியர் வெற்றியாளர் மற்றும் கோல்டன் பெர்லின் பியர் வேட்பாளர்) 3. பிலிப் கேரலின் திப்லோ (வெள்ளி பெர்லின் பியர் வெற்றியாளர் மற்றும் கோல்டன் பெர்லின் பியர் வேட்பாளர்)

புசான் சர்வதேச திரைப்பட விழா, ஃபஜ்ர் திரைப்பட விழா, வெனிஸ் திரைப்பட விழா, சான் செபாஸ்டியன் சர்வதேச திரைப்பட விழா மற்றும் லோகார்னோ சர்வதேச திரைப்பட விழா போன்ற பிரபலமான திரைப்பட விழாக்களின் படங்கள்.

ஈரானிய திரைப்படங்கள்: 8 படங்கள்

நாடு கவனம் - கொரியா: 5 படங்கள் (உபயம்: கொரியக் குடியரசுத் துணைத் தூதரகம் சென்னையில்) ஜெர்மன் சினிமா: 2 படங்கள் (உபயம்: கோதே-இன்ஸ்டிட்யூட், சென்னை), அப்பயர் - பெர்லிநேல் உட்பட வெள்ளி கரடி வெற்றியாளர் பிரெஞ்சு திரைப்படங்கள்: 3 படங்கள் (உபயம்: அலையன்ஸ் ஃபிரான்சாய்ஸ் ஆஃப் மெட்ராஸ்) சமகால சினிமா ஹங்கேரியில் இருந்து: 3 படங்கள் (உபயம்: லிஸ்ட் இன்ஸ்டிடியூட் - ஹங்கேரியன் கல்ச்சுரல் சென்டர், புது டெல்லி) மெக்சிகோவின் காட்சிகள்: 3 படங்கள் (உபயம்: இந்தியாவில் உள்ள மெக்சிகோ தூதரகம், புது டெல்லி) பின்னோக்கி இயக்குனர் லாயிஸ் போடன்ஸ்கி: 3 படங்கள் (உபயம்: இந்தியாவில் பிரேசில் தூதரகம், புது தில்லி) தைவான் கிளாசிக்ஸ்: 2 படங்கள் (உபயம்: சென்னையில் உள்ள தைபே பொருளாதாரம் மற்றும் கலாச்சார மையம்) ஆஸ்திரேலிய பழங்குடியினர் திரைப்படங்கள்: 2 படங்கள் (உபயம்: சென்னையில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம் - ஜெனரல்) இந்தியாவில் உள்ள போர்ச்சுகல் தூதரகம், புது தில்லி (அல்மா விவா) மூலம் தலா 1 படம் வழங்கப்பட்டது; ஃபின்லாந்தில் ஃபின்னிஷ் திரைப்பட அறக்கட்டளை (பாலன் லீப்ஸ்); சென்னையில் ரஷியன் ஹவுஸ் (நியுர்ன்பெர்க்) மற்றும் ஈரானில் உள்ள ஃபராபி சினிமா அறக்கட்டளையின் 2 படங்கள் (கேப்டன், லெதர் ஜாக்கெட் மேன்)

இந்தியன் பனோரமா: ஆஸ்கார் 2024 உட்பட 19 படங்கள் (6 படங்கள் ஞ்ரிதிதி, ழிதிஞ்ரிசி இந்தியாவின் உபயம்) பரிந்துரைக்கப்பட்ட இந்திய திரைப்படம் '2018: யவிரிஒன் இஸ் எ ஹீரோ' தமிழ் அம்சம் திரைப்படப் போட்டி: 12 படங்கள் அஞ்சலி: ஹங்கேரிய நடிகர் பீட்டர் அன்டோராய்க்கு அஞ்சலி சுற்றுச்சூழல் பற்றிய திரைப்படங்கள்: கண்ணே கலைமானே (தமிழ்) ஹியர் கம்ஸ் தி லிப்போர்ட் (கன்னடம்) தமிழ்நாடு அரசு எம்ஜிஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன மாணவர்களின் குறும்படங்கள்

ஐ சி எப் எப் முதல் முறையாக:

உலக சினிமா பிரிவில்:

வியட்நாம், ஜோர்டான், சவூதி அரேபியா, கத்தார், தஜிகிஸ்தான், பனாமா, மங்கோலியா, கஜகஸ்தான், ரீயூனியன், உருகுவே, மாசிடோனியா, யுஏஇ மற்றும் திபெத் திரைப்படங்கள்

முக்கிய வகுப்பு:

அவிச்சி கல்லூரியின் ஏற்பாட்டில் திரைப்படத்துறை மற்றும் இலக்கியத்துறையைச் சேர்ந்த பிரபலங்கள் 12 அமர்வுகளை நடத்துகிறோம்.

இந்த ஆண்டு டிஜி வைஷ்ணவ் கல்லூரி மற்றும் எத்திராஜ் கல்லூரியில் இருந்து மாணவர் தன்னார்வலர்களை அழைத்துச் செல்வோம்.

பிரதிநிதி பதிவு

அண்ணா சினிமாஸ், #21, அண்ணாசாலை (மவுண்ட் ரோடு), சென்னை என்ற முகவரியில் நேரடிப் பதிவு. தினமும் காலை 10:30 முதல் மாலை 6:00 மணி வரை (1 டிசம்பர் 2023 முதல்).

# மதிப்பை அதிகரிக்க, ஆஸ்டர் அதன் இந்தியா மற்றும் ஜி.சி.சி வணிகங்களை பிரித்து, ஆஸ்டர் ஜி.சி.சி -இல் முதலீடு செய்ய ஃபஜ்ர் கேபிடல் தலைமையிலான கூட்டமைப்புக்கான ஒப்பந்தத்தை அறிவிக்கிறது

சென்னை, 30 நவம்பர் 2023: ஜிசிசி மற்றும் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் ஒருங்கிணைந்த சுகாதார வழங்குனர்களில் ஒன்றான ஆஸ்டர் டிஎம் ஹெல்த்கேர் ("அஸ்டர்") இன்று இந்தியா மற்றும் ஜிசிசி வணிகங்களை இரண்டு தனித்துவமான மற்றும் சுயாதீனமான நிறுவனங்களாக பிரிக்க அதன் துணை நிறுவனமான அஃபினிட்டி ஹோல்டிங்ஸ் பிரைவேட் லிமிடெட் ("அஃபினிட்டி") இலிருந்து குழு ஒப்புதல்களையும் மற்றும் அதன் இயக்குநர்கள் குழுவிலிருந்து ஒப்புதலையும் பெற்றது. இந்த பிரிப்புத் திட்டத்தின் கீழ், ஆஸ்டர் இன் ஜிசிசி வணிகத்தில் முதலீடு செய்வதற்காக, ஐக்கிய அரபு எமிரேட்ஸைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு இறையாண்மைக்கு சொந்தமான தனியார் பங்கு நிறுவனமான எப் ஏ ஜெ ஆர் காப்பிட்டல் தலைமையிலான முதலீட்டாளர்களின் ஒரு கூட்டமைப்புடன் அஃபினிட்டி ஒரு முறையான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஃபஜ்ர் கேபிடல் தலைமையிலான கூட்டமைப்பில் எமிரேட்ஸ் முதலீட்டு ஆணையம், அல் டவ் ஹோல்டிங் நிறுவனம் (அல்சேயர் குழுமத்தின் முதலீட்டுப் பிரிவு), ஹனா இன்வெஸ்ட்மென்ட் கம்பெனி (ஒலயன் ஃபைனான்சிங் கம்பெனி இன் துணை நிறுவனம்) மற்றும் வஃப்ரா இன்டர்நேஷனல் இன்வெஸ்ட்மென்ட் கம்பெனி ஆகியவையும் அடங்கும். இந்த பரிவர்த்தனைக்கு பேச்சுவார்த்தை நடத்திய அஃபினிட்டி இயக்குனர்கள் குழு மற்றும் அதன் பிரதிநிதிகள் ஃபஜ்ர் கேபிடல் தலைமையிலான கூட்டமைப்பு வழங்கிய சாதகமான மதிப்பீடு மற்றும் பிற விதிமுறைகள் பற்றிய ஒரு நேர்மறையான பார்வையை உருவாக்கினர்.

"ஜிசிசி க்காக, ஃபஜ்ர் கேபிடல் ஆனது, ஜிசிசி வணிகத்தில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களின் கூட்டமைப்பை வழிநடத்துவதற்கு, எங்களின் நம்பகமான தனியார் சமபங்கு பங்குதாரராக அஃபினிட்டி இயக்குனர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அவர்களின் நிரூபிக்கப்பட்ட நிபுணத்துவத்தின் காரணமாக நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம், மேலும் ஜிசிசி இன் டைனமிக் உடல்நல பராமரிப்பு சூழலில் , குறிப்பாக சவூதி அரேபியாவில் எங்கள் விரிவாக்கத் திட்டங்களை மேம்படுத்துவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பால் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மூப்பன் குடும்பம் ஜிசிசி வணிகத்தில் 35% பங்குகளை வைத்திருக்கும். ஒன்றாக, ஃபஜ்ர் கேபிட்டலின் வலுவான சந்தை இருப்பு மற்றும் நெட்வொர்க்கின் ஆதரவுடன், ஜிசிசி யில் உள்ள ஆஸ்டர் இன் வணிகமானது, பிராந்தியம் முழுவதும் உள்ள அதன் நோயாளிகளுக்கு வகையில் சிறந்த உடல்நல பராமரிப்பு சேவைகளைத் தொடர்ந்து வழங்கும் ஒரு எதிர்காலத்தை நாங்கள் கற்பனை செய்கிறோம். அலிஷா இந்த லட்சியங்களை முன்னெடுத்துச் செல்வார் மற்றும் ஜிசிசி இல் எங்களது வளர்ச்சிப் பாதையின் அடுத்த கட்டத்தை நிர்வகிப்பார். "என்றார்.

ஆஸ்டர் இன் ஜிசிசி பிசினஸ் இன் நிர்வாக இயக்குநராகவும், குழும தலைமை செயல் அதிகாரியாகவும் பணியாற்றும் திருமதி.அலிஷா மூப்பன் கூறும்பொழுது "ஆஸ்டர் டிஎம் ஹெல்த்கேர் இன் இந்திய வணிகமானது குறுகிய காலத்திற்குள் பன்மடங்கு வளர்ச்சியில் நிலையான முன்னேற்றம் அடைந்தாலும், இந்தப் பிரிப்பானது, அதன் புவியியல் விரிவாக்கத்தின் மூலம் மதிப்பைத் திறப்பதற்கான குறிப்பிடத்தக்க வாய்ப்பைப் பயன்படுத்துவதற்கு மற்றும் மூன்றாம் நிலை பராமரிப்பு மற்றும் டிஜிட்டல் உடல்நலத்திற்கு விரிவடையும் அதே நேரத்தில் பல்வேறு பொருளாதாரப் பிரிவுகளை இலக்காகக் கொண்டு வருவாயைப் பன்முகப்படுத்துவதற்கு எங்கள் ஜிசிசி செயல்பாடுகளுக்கு உதவும். ஜிசிசி வணிகத்துடனான எங்கள் பயணத்தில், வணிக விரிவாக்கத்தை எளிதாக்குவதில் அவர்களின் நிபுணத்துவத்திற்காக நன்கு அறியப்பட்ட ஃபஜ்ர் கேபிட்டல் உடன் இணைந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கேஎஸ்ஏ சந்தையில் எங்களின் வரவிருக்கும் விரிவாக்கங்களுடன், அவர்களின் மூலோபாய ஆலோசனை மிகவும் மதிப்புமிக்கதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்."என்றார். ஃபஜ்ர் கேபிட்டல் இன் தலைமை நிர்வாக அதிகாரி திரு. இக்பால் கான் கூறும்பொழுது, "மூப்பன் குடும்பம் மில்லியன் கணக்கான நோயாளிகளுக்கு உயர்தர உடல்நல பராமரிப்பு சேவையை வழங்கும் ஒரு வளமான பாரம்பரியத்தின் மூலம் ஒரு உலகத் தரம் வாய்ந்த நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. பெரிய குடும்பம் சார்ந்த தள வணிகங்கள் எங்களுக்கு ஆழ்ந்த அனுபவம் உள்ள ஒரு பகுதியாக இருக்கிறது. மேலும் வளைகுடா பகுதி முழுவதும் ஒருங்கிணைந்த உடல்நல பராமரிப்பு சேவைகளுக்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய ஆஸ்டர் க்கு குறிப்பிடத்தக்க ஆற்றல் உள்ளது என்று நாங்கள் நம்புகிறோம். மூப்பன் ஃபேமிலி இன் நம்பிக்கைக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் மேலும் தொடர்ந்து முதலீடு, புதுமை மற்றும் விரிவாக்கம் மூலம் ஆஸ்டர் இன் அபிலாஷைகளை விரைவாக நிறைவேற்ற எங்கள் கூட்டமைப்பு பங்காளிகள் மற்றும் நிர்வாகக் குழு அவர்களுடன் இணைந்து பணியாற்ற எதிர்நோக்குகிறோம்." என்றார்.

இந்தியாவில் ஆஸ்டர் டிஎம் ஹெல்த்கேர் லிமிடெட் இன் தலைமை செயல் அதிகாரி டாக்டர் நிதீஷ் ஷெட்டி ,"எங்கள் குடிமக்கள் மலிவு விலையில் தரமான உடல்நல பராமரிப்பு சேவைகளை நாடுவதால், இந்திய உடல்நல பராமரிப்பு சந்தை ஒரு முன்னோடியில்லாத வளர்ச்சி வாய்ப்பை வழங்குகிறது. ஆஸ்டர் டிஎம் ஹெல்த்கேர், நோயாளியின் வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் பரவியுள்ள ஒரு கவனமாக வடிவமைக்கப்பட்ட உடல்நல பராமரிப்பு சுற்றுச்சூழல் அமைப்பைச் செம்மைப்படுத்தியுள்ளது. ஆரம்ப நிலை , இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் நான்காம் நிலை பராமரிப்பு உள்ளிட்ட முழுமையான உடல்நல பாரராமரிப்புத் தீர்வுகளை வழங்குவதற்கும், புதுமையான மருத்துவத் தீர்வுகளை முன்னணியில் கொண்டு வருவதற்கும், முக்கியமான உடல்நல பராமரிப்பு சவால்களை எதிர்கொள்வதற்கும், நோயாளியின் சுகம் பெறுதலை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்வதற்கும், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திர கற்றல் போன்ற புதிய கால தொழில்நுட்பத்தில் அதிக முதலீடு செய்வதிலும் இந்த நிறுவனம் தனித்துவமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. எங்கள் ஐந்தாண்டு மேல்நிலை மற்றும் கீழ்நிலை சிஏஜிஆர் இந்த வணிக மாதிரியின் வலிமைக்கு ஒரு சான்றாக இருக்கிறது. இந்த மறுசீரமைப்பு இந்திய இருப்புநிலையை அதன் மூலதன ஒதுக்கீடு கொள்கைகளை வளர்ந்து வரும் வளர்ச்சி வாய்ப்புகளுடன் சீரமைப்பதற்கான நெகிழ்வுத் தன்மையுடன் வழங்குகிறது." என்று கூறினார். இந்த பிரிப்பானது, இந்தியாவில் மட்டும் அல்லது பெரும்பான்மையான வணிகங்களில் முதலீடு செய்ய வேண்டியிருக்கும் முதலீட்டாளர்களை உள்ளடக்குவதற்கு, அதன் நிறுவன முதலீட்டாளர் தளத்தை விரிவுபடுத்தும் ஒரு வாய்ப்பையும் ஆஸ்டர் இந்தியா நிறுவனத்திற்கு வழங்கும். இந்தியா பிசினஸ் இன் பங்குதாரர்கள் இந்த பட்டியலிடப்பட்ட நிறுவனத்திற்கான செயல்பாட்டு மற்றும் நிதி அளவுருக்கள் பற்றிய சிறந்த அறிக்கையால் பயனடைவார்கள்.

இந்த பரிவர்த்தனை இந்தியாவில் பங்குதாரர் ஒப்புதல், ஒழுங்குமுறை இணக்கங்கள் மற்றும் முடலுக்கான பிற வழக்கமான நிபந்தனைகளுக்கு உட்பட்டது. இந்த பரிவர்த்தனை மார்ச் 2024க்குள் முடிவடையும் என்று நிறுவனம் எதிர்பார்க்கிறது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

# எக்ஸான்மொபில், இந்தியாவின் மோட்டார் ஸ்போர்ட்ஸை மேம்படுத்த இந்தியாவின் முதல் எஃப்4 சாம்பியன்ஷிப் மற்றும் இந்தியன் ரேசிங் லீக்கின் சீசன் 2 வில் கைகோர்த்து வெற்றிகரமாக நடத்துகின்றது



சென்னை, 30 நவம்பர் 2023: எக்ஸான்மொபில் இந்த ஆண்டு இந்திய ரேசிங் திருவிழாவை வலுப்படுத்துவதன் மூலம் இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் மோட்டார் விளையாட்டுத் துறையை உயர்த்துகிறது, இதில் நாட்டிலேயே முதன்முறையாக எஃப்4 இந்திய சாம்பியன்ஷிப் மற்றும் இந்திய ரேசிங் லீக் (ஐ ஆர் எல்) இரண்டாவது சீசன் சென்னையின் மெட்ராஸ் இன்டர்நேஷனல் சர்க்யூட் (எம்ஐசி) மற்றும் புதிய ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் (எஃப்சிஆர்) ஆகியவற்றில் நடைபெற்றது.

இந்த ஆண்டு இந்தியா மற்றும் தெற்காசியாவில் மற்றொரு முதல் இடத்தைக் குறிக்கும் - அற்புதமான இரவுப் பந்தயங்களின் எஃப் சி ஆர் இல் ,இது தீவு மைதானத்தை சுற்றி அமைந்துள்ள நகரின் மையத்தில் நடக்கவுள்ளது.

இது, எக்ஸான்மொபில் இன் ரேசிங் ப்ரோமோஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (ஆர் பி பி எல்) உடனான தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டு கூட்டாண்மையின் ஒரு பகுதியாகும், இது நாட்டில் உள்ள மோட்டார்ஸ்போர்ட்களின் பிரபலப்படுத்தி அதன் தரத்தை உயர்த்துகிறது மற்றும் அனைத்து ஆர்வமுள்ள பந்தய வீரர்களுக்கும் மிகவும் எளிதாக சென்றடையும் விதத்தில் செயலாற்றுகிறது .

ஐஆர்எல் உடனான கூட்டாண்மை சென்னை எம்ஐசியில் நடந்த நிகழ்வில் ஐஆர்எல் ப்ரீ சீசன் டெஸ்டில் கொண்டாடப்பட்டது., ஓட்டுநர்கள் மெபில் 1டிஎம் தயாரிப்புகளை காட்சிப்படுத்தினர், மேலும் மெபில் 1டிஎம் பிராண்டிங் ரேசிங் மைதானத்தில் முழுவதும் முக்கியமாகக் காட்டப்பட்டது. எக்ஸான்மொபில் ஆனது மெபில் 1டிஎம் மூலம் பந்தய வீரர்களுக்கு நம்பிக்கையை அளிக்கிறது, இது சிறந்த என்ஜின் செயல்திறனை வழங்குவதில் சாதனையை படைத்துள்ளது - இது பந்தயத்திற்கு மையமானது.

இந்தியாவின் முதல் 'பிரான்சைஸ்' அடிப்படையிலான மோட்டார்ஸ்போர்ட்ஸ் லீக், ஐ ஆர் எல் சீசன் 2 ஏழு நகர அடிப்படையிலான அணிகளை ஒன்றிணைக்கிறது. போட்டியில் மோட்டார்ஸ்போர்ட்டிங்கில் தனித்துவமான தரங்களைக் கொண்டு, இந்தியாவின் இது ஒரே நான்கு சக்கர பந்தய லீக் ஆகும் மற்றும் உலகின் முதல் பாலின நடுநிலை பந்தய சாம்பியன்ஷிப் என ஐ ஆர் எல் மோட்டார் பந்தயத்தில் முதல் ஆண்டிலிருந்தே ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. பந்தய ஆர்வலர்கள் உற்சாகத்துடன் பங்கேற்கவும் , கார் மெக்கானிக்ஸ் மற்றும் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் மாணவர்களுக்கான இன்டர்ன்ஷிப் திட்டங்கள் மூலம் மோட்டார்ஸ்போர்ட்களுக்கான புதிய தலைமுறை திறமைகளை ஐ ஆர் எல் உற்சாகத்துடன் வழிநடத்துகிறது .

எஃப்4 இந்திய சாம்பியன்ஷிப் இந்தியாவில் பந்தயத்திற்கான ஆர்வத்தை மேலும் உயர்த்துகிறது, சூப்பர் லைசென்ஸ் புள்ளிகளை வெல்லும் வாய்ப்பைப் பெற தகுதிவாய்ந்த 11 ஓட்டுநர்களைக் கொண்ட பட்டியல் . இந்த நிகழ்வு உலகெங்கிலும் உள்ள பங்கேற்பாளர்களை ஈர்த்தது, மோட்டார் பந்தயத்தில் இந்தியாவை உலகளாவிய லீக்கிற்கு டர்போசார்ஜ் செய்தது. எப் ஐ ஏ ஃபார்முலா 4 விதிமுறைகளின்படி ஒழுங்குபடுத்தப்பட்ட ஃபார்முலா பந்தயக் கார்களுக்குத் வாய்ப்பளிக்கும் இந்த நிகழ்வு பெரும் உற்சாகத்துடன் கோடி அசைத்து தொடங்கப்பட்டது. விபின் ராணா, சி ஈ ஓ - எக்ஸான்மொபில் லூப்ரிகண்ட்ஸ், கூறியதாவது: "இந்தியாவின் மோட்டார்ஸ்போர்ட்ஸ் காட்சி அனைத்து சிலிண்டர்களிலும் இயங்கும் ஆற்றல் கொண்ட என்ஜினை போல் சுடுவதில் பல ஆர்வமுள்ள பந்தய வீரர்கள் வெளிச்சத்தில் அடியெடுத்து வைத்து இந்திய பந்தய விழா வழங்கிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆர் பி பி எல் உடனான எங்கள் கூட்டாண்மை மூலம், உலகளாவிய மோட்டார்ஸ்போர்ட்ஸில் தேசத்தின் அந்தஸ்தை உயர்த்திய ஐ ஆர் எல் சீசன் 1 இன் வெற்றியை நாங்கள் உருவாக்குவது மட்டுமல்லாமல், நாட்டின் முதல் எஃப்4 இந்திய சாம்பியன்ஷிப்பை மேம்படுத்துகிறோம், இது விளையாட்டுக்கு மாற்றமாக இருக்கும். தொடர்ச்சியான ஒத்துழைப்பு மெபில் 1டிஎம் இல் உள்ள பந்தய வீரர்களை அவர்களின் சக்திவாய்ந்த இயந்திரங்களுக்கு தடையற்ற செயல்திறனை வழங்குவதற்கு மேலும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மோட்டார்ஸ்போர்ட்ஸ் ஆர்வலர்களின் வலுவான சமூகத்தை கட்டியெழுப்புவதுடன், நம்பிக்கை மற்றும் உண்மையான விளையாட்டுத்திறன் ஆகியவற்றின் மதிப்புகளை நாங்கள் முன்னிலைப்படுத்துகிறோம் மற்றும் மோட்டார்ஸ்போர்ட்ஸ் மீதான ஆர்வத்தைத் தொடர அதிக இளைஞர்களை மேம்படுத்துகிறோம். இந்நிகழ்வு நாட்டில் மோட்டார்ஸ்போர்ட்ஸின் பிரபலத்தை மேலும் ஊக்குவிக்கும்..

எம் ஈ ஐ எல் இன் இயக்குனர் மற்றும் ஆர் பி பி எல் தலைவர் அகிலேஷ் ரெட்டி மேலும் கூறியதாவது: "ஐஆர்எல் அதன் நற்சான்றிதழ்களை நாட்டின் ஒரே வகையான பந்தய சாம்பியன்ஷிப் என்று வரையறுத்துள்ளது - மோட்டார் விளையாட்டுகளை பின்பற்ற அதிக இளைஞர்களை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், ஒரு புதிய சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குகிறது. உலகில் முதல் முறையாக பாலின - நடுநிலை பந்தயம் . எக்ஸான்மொபிலுடன் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ஒத்துழைப்பதில் பெருமிதம் கொள்கிறோம், பந்தய வீரர்களுக்கு தேவையான நம்பிக்கையை வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் மெபில் 1டிஎம் உறுதியளிக்கிறது. இதன் மூலம், பந்தய வீரர்களுக்கு ஆற்றலையும் ஆர்வத்தையும் அளிக்கும் லூப்ரிகண்டுகள் மற்றும் பிற பொருட்கள் - இந்த இயந்திரங்களை இயக்குவதில் என்ன நடக்கிறது என்பதையும் நாங்கள் முன்னிலைப்படுத்துகிறோம். குறிப்பாக இளைஞர்களுக்கு மோட்டார் விளையாட்டுகளை தொழில் வாய்ப்பாக தொடர வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் இந்த கூட்டாண்மையானது நாட்டில் வலுவான மோட்டார் பந்தய கலாச்சாரத்தை மேலும் உயர்த்துகிறது.

எக்ஸான்மொபில் உயர்மட்ட ரேஸ் அணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தயாரிப்புகளை உருவாக்குவதில் வலுவான பாரம்பரியத்தைக் கொண்டுவருகிறது. 1915 ஆம் ஆண்டு முதல், எக்ஸான்மொபில் அதன் மசகு எண்ணெய் தொழில்நுட்பத்தை பந்தயத்தில் சோதித்து, ரைடர்ஸ் செயல்திறன் மற்றும் லேப் நேரத்தை மேம்படுத்த உதவுகிறது. மிக சமீபத்தில், மொபில் 1 மோட்டோஜிபி பாரத் 2023 தொடக்க கிராண்ட் பிரிக்ஸ் இல் அதன் முழு செயல்பாட்டை அரங்கேற்றியது.

# அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, வங்கி, நிதி சேவைகள் மற்றும் காப்பீடு (பி எஃப் எஸ் ஐ) சார்ந்த திறன் மேம்பாட்டுக் கல்விப் பயிற்சியை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் (டி என் ஏ எஸ் டி சி) இணைந்து செயல்படுத்தவுள்ளது



சென்னை, 30 நவம்பர் 2023: சிறந்த கல்வி நிறுவனமாக முன்னணியில் விளங்கும், அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத் துறையில் (பி எஃப் எஸ் ஐ) திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்புகளை வலுப்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் (டி என் ஏ எஸ் டி சி) இணைந்து செயலாற்றுவது குறித்த புதுமையான முயற்சியை முன்னெடுத்துள்ளது என்பதைப் பெருமிதத்துடன் அறிவித்துள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் நிர்வாக உறுப்பினர் திரு. பன்னாலால் சோர்டியா, நிர்வாக இயக்குநர் (டி என் ஏ எஸ் டி சி - பி எஃப் எஸ் ஐ) திரு. டி. அஜய் ஆகியோர்

அதிகாரப்பூர்வமாகக் கையெழுத்திட ஒப்பந்தம் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

மாணவர்கள், வங்கி நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத் துறை (பி எஃப் எஸ் ஐ) ஆகிய தளங்களில் சிறந்து விளங்குவதற்கான தெளிவான பாதையை உருவாக்கும் வகையில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டுள்ளது . மேலும் இவ்வொப்பந்தம் நிதியியல் துறையில் மாணவர்கள் சவால்களை எதிர்கொள்ளும் வகையையும் உறுதிசெய்கிறது. இந்த நடைமுறை அணுகுமுறை மாணவர்களை பணிக்குத் தயார்படுத்துவதையும், போட்டிகள் மிகுந்த தொழில்சார் உலகில் அவர்களை வெற்றி பெறச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன்(டி என் ஏ எஸ் டி சி) இணைந்து செயல்படுவது குறித்துக் கருத்துத் தெரிவித்த அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் புலத்தலைவர், டாக்டர் ம.ம, ரம்யா, அவர்கள் கூறுகையில் "தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் (டி என் ஏ எஸ் டி சி) இணைந்து அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை நோக்கி அடியெடுத்து வைப்பது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் மாணவர்கள் தொழில் சார்ந்த திறன்களில் தேர்ச்சி பெறுவது இன்றியமையாதது என்று நாங்கள் நம்புகிறோம். எதிர்காலத்தில் வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத் துறை (பி எஃப் எஸ் ஐ) ஆகிய துறைகளில் உள்ள ஆற்றல் மிகு சவால்களுக்கு ஏற்ற வகையில் எங்கள் மாணவர்கள் ஆயத்தப்படப் போவதையும் இவ்வொப்பந்தம் உறுதி செய்கிறது. இந்தக் கூட்டணி கல்வித்துறையில் நாங்கள் சிறந்து விளங்குவதற்கான நிலைப்பாட்டை வலுப்படுத்துகிறது."

அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, டேலி எஜிகேஷன் நிறுவனத்துடன் மற்றொரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலமாக இந்நிறுவனங்கள் வணிகவியல் (பி.காம்) மற்றும் வணிக மேலண்மை (பி.பி.ஏ) ஆகிய பட்டப்படிப்புகளுக்கு ஏற்றவாறு தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்ட திறன் மேம்பாட்டுத் தளத்தை அறிமுகப்படுத்த உள்ளது. அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரியின் இந்தத் தொடர்ச்சியான முன்னெடுப்புகள், வேகமாக முன்னேறி வரும் தொழில்நுட்ப உலகில் உள்ள சவால்களுக்கேற்ப மாணவர்களை ஆயத்தப்படுத்துவதில் முனைப்புடன் உள்ளது. தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் வகிக்கும் இக்கல்லூரி நிர்வாகம் , மாறி வரும் தொழில் உலகில் மாணவர்கள் தங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்குத் தேவையான நிபுணத்துவத்தை வழங்க உறுதிபூண்டுள்ளது.

# இந்தியாவில் ஃப்ரீஸ்டைல் லிப்ரேலிங்க் சிஸ்டத்தைப் பயன்படுத்துபவர்களுக்காக ஃப்ரீஸ்டைல் லிப்ரேலிங்க் மொபைல் செயலியை அபாட் அறிமுகப்படுத்தியுள்ளது

சென்னை, 30 நவம்பர் 2023: ஆரோக்கியப் பிரிவின் உலகளாவிய தலைமைத்துவ நிறுவனமான அபாட், தனது டிஜிட்டல் ஹெல்த் டூலான ஃப்ரீஸ்டைல் லிப்ரேலிங்க் செயலியை இந்தியாவில் அறிமுகப்படுத்துவதை அறிவித்தது. ஃப்ரீஸ்டைல் லிப்ரே அமைப்பைப் பயன்படுத்துபவர்கள் தங்கள் குளுக்கோஸ் அளவுகளை தங்கள் மொபைல்களின் மூலம் எந்த நேரத்திலும் குத்தும் வலியின்றி அளவிட இந்த மொபைல் பயன்பாடு அனுமதிக்கும் 1 ஒருங்கிணைந்த ஃப்ரீஸ்டைல் லிப்ரேலிங்க் டிஜிட்டல் பிளாட்ஃபார்மை அறிமுகப்படுத்துவதன் மூலம், எளிதான கண்காணிப்பு, எளிதான நுண்ணறிவு மற்றும் எளிதான இணைப்பு மூலம் மக்கள் தங்கள் நீரிழிவுகளை சிறப்பாக நிர்வகிக்க அதிகாரம் அளிப்பதை அபாட் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஐஃபோன் மற்றும் ஆன்டிராய்டு மொபைல் பயன்பாடு இணக்கமான ஸ்மார்ட்போன்களில் வேலை செய்யக் கிடைக்கிறது.

ஃப்ரீஸ்டைல் லிப்ரேலிங்க் செயலியானது நீரிழிவு நோயாளிகள் தங்கள் ஸ்மார்ட்போன்களில் நிகழ்நேரத்தில் அவர்களின் குளுக்கோஸ் தரவைப் பார்க்கவும், அவர்களின் மருத்துவர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் தகவல்களை எளிதாகப் பகிரவும் உதவுகிறது. மொபைல் செயலியானது குளுக்கோஸ் தரவை சென்சாரிலிருந்து மொபைல் பயன்பாட்டிற்கு மாற்றுவதற்கு நியர்-ஃபீல்டு கம்யூனிக்கேஷன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது, இது , உணவு, இன்சுலின் பயன்பாடு, மருந்து மற்றும் உடற்பயிற்சியை நிர்வகிப்பதற்கான நிகழ்நேர போக்கு முறைகள் அவர்களின் ஸ்மார்ட்போனில் எட்டு மணிநேர குளுக்கோஸ் வரலாற்றைக் கண்காணிக்க மக்களை அனுமதிக்கிறது இது குளுக்கோஸ் கண்காணிப்புக்கு தனி ரீடரைப் பயன்படுத்த வேண்டிய தேவையை நீக்குகிறது.

அறிமுகத்தின்போது பேசிய தெற்காசியாவில் அபாட்ஸ் நீரிழிவு பராமரிப்பு வணிகத்தின் பொது மேலாளர் கல்யாண் சத்தாரு அவர்கள், "நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் நீரிழிவு நோயை திறம்பட நிர்வகிப்பதற்கான பல பணிகளை எதிர்கொள்வதால் குறிப்பிடத்தக்க சுமைகளை அனுபவிக்கின்றனர். ஃப்ரீஸ்டைல் லிப்ரேலிங்க் செயலியானது உலகளவில் நீரிழிவு நோயுடன் வாழும் 5 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பயன்படுத்தப்படும் உலகின் நம்பர் 1 தொடர்ச்சியான குளுக்கோஸ் கண்காணிப்பான ஃப்ரீஸ்டைல் லிப்ரே சென்சாருடன் தடையின்றி ஒருங்கிணைக்கிறது. 2 அபாட்டில், எங்கள் ஃப்ரீஸ்டைல் லிப்ரே தொழில்நுட்பம் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தினசரி நடைமுறைகளை எளிதாக்குவது மட்டுமல்லாமல், நீரிழிவு நோயை மிகவும் திறம்பட நிர்வகிக்க அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதை உறுதிசெய்ய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் " என்று கூறினார்.

மேலும், மூத்த நீரிழிவு நிபுணர் டாக்டர் மனோஜ் சாவ்லா அவர்கள், "நிகழ்நேர அடிப்படையில் குளுக்கோஸ் தகவலை தானாகப் பெறும் திறன், நீரிழிவு நோயாளிகள் மற்றும் அவர்களைப் பராமரிப்பவர்களுக்கு நீரிழிவு மேலாண்மையை எளிதாக்கும். இப்புதிய நீரிழிவு தொழில்நுட்பம் துல்லியமான மற்றும் தகவலறிந்த முடிவினை மேற்கொள்வதற்கு வழி வகுக்கும்" என்று கூறினார்.